மணக்கால்

ராமஸ்வாமி

அவதானிகளின்

935
4.19

# ஞாபகார்த்தகம்.

("In Memoriam")

OFFICE OF THE REGISTRAR
11 DEC 1919
MADRAS

ஷை அவர்களின் மனைவி

...ா. லக்ஷிமியம்மாளால்

எழுதப்பட்டது.

மணக்கால் இராமஸ்வாமி அவதானிகளின், 11 DEC 1919

# ஞாபகார்த்தம்.

935
4-19

பளிங்குபோன்ற பரிசுத்தமான நீரை தன்னுடைய கரைகளின்மீது மோதிக்கொண்டு இத்தென்தேயக் கங்கையாய் விளங்காநிற்கும் காவரியாற்றின்கண் புராதன சோழமண்டலாதிபதிகளின் தலைநகராய்ச் செழிந்தோங்கி நின்ற திருச்சிக்குச் சுமார் பன்னிரண்டு மைல்களுக்கருகில் மணக்கால் என்னும் கிராமத்தில் சிவநேசச்செல்வர்களாயும், ஜாதிமதாசாரம் தவறாது நடந்துவந்துகொண்டிருந்த வெங்கிடராம அவதானிகளுக்கும் அவருடையதர்மபத்னியாகியவேம்பு அம்மாளுக்கும் மூன்றாவது குமாரனாய் ருத்ரோத்காரிவருஷம் தோன்றினர். இவர் முன்னோர்கள் விம்புக்கு வேடங்கொள்ளாமல் உண்மையாய் அந்தரங்க பக்தியுள்ளவர்கள். இக்கிராமத்தில் இவர்கள் பல தலைமுறைகளாயிருந்துகொண்டு பிரக்யாதிபெற்று வந்திருந்தார்கள். இக் குழவிக்கு முந்தி ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தபடியினால் இதை மிகவும் அன்புடனும் ஆதரவுடனும் போஷித்துவந்தார்கள். குழந்தையும் நன்கு வளர்ந்து வருங்காலத்தில், லோகரக்ஷகனுடைய நாமத்தைப் பாராயணம் செய்யும்பொருட்டும், ஸ்ரீ ராமரிடத்தில் தசரதமகாராஜனுடைய அன்பைப்போல் குழந்தையினிடத்தில் தங்களுடைய அன்பு அழியாமலிருக்கும் பொருட்டும் ராமசுவாமி என்று அதை நாமகரணம் செய்தார்கள். "பெற்றோர்களைப்போல் பிள்ளையும்" என்கிறமாதிரி ராமஸ்வாமியும் சமபாசாரநீதி தவறாமல் வளரவளர தெய்வபக்தி மேலிட்டு தன்னுடன்கூடிவிளையாடும் பிள்ளைகளுக்கு அப்பமேசுவரனுடைய குணாதிசயங்களை தானறிந்தவரையில் எடுத்துரைத்து வந்தார். தன் சகாக்களுடன் ஆடியோடி விளையாடி காலங்கழித்தார். நீந்துவதும் மதிலேருவதும், மரமேருதலும் வாணவெடி செய்வதுமே இவருடைய முக்கிய பால்யகாலம்போக்கிகளாயிருந்தன. அவர்களுடன் கூடி விளையாடும் சமயங்களில், தன் சகாக்கள் பொய் பித்தலாட்டம் ஆடினால் கடிந்து சினங்கொள்வார். அவர்கள் தாய் தகப்பன் அண்ணன் தம்பி, உற்றார் உறவினர்களிடம் கோபங்கொண்டால் அன்பின் மகிமையை மகிழ்வார். ஒருசமயம் இவருடன் கூடிவிளையாடிக்கொண்டிருந்த அப்பாசாமி என்பவன்

144244
600 008



தன்னுடைய வீட்டிற்குப்போக இரவு அதிகநேரமாச்சுது. அப்பொழுது அவன்தாய் தகப்பனர் கோபித்தார்கள். அவ்வமயம் அப்பாசாமி அவர்களுக்குரைக்காமலே ராமஸ்வாமியிடம் வந்து சமாசாரத்தைத்தெரிவித்து இரவு அவ்விடத்தில் தங்க அனுமதி கேட்டான். ராமஸ்வாமிக்கு உடனே கோபம் வந்துவிட்டது. பலவாருக அப்பாசாமியுடைய புத்தியீனத்திற்கு வருத்தமுற்று நற்புத்திகூறி அவனை வீட்டிற்கு அழைத்துப்போய் அவன் பெற்றோர்களிடம் தப்பை ஒப்புக்கொள்ளசெய்தபிறகே ராமஸ்வாமிக்கு இராத்தூக்கம் பிடித்தது. ராமஸ்வாமிக்கும் வயது எட்டாய்விட்டது. பிராமணனுக்கத்தியாவசியமான உபநயன முகூர்த்தமும் விமரசையாய் நடந்தேரியது. அக்காலத்தில் ஆங்கிலப்படிப்பு தற்போதைய ஸ்திதியில்லாமலிருந்தபடியினால் பிள்ளையை வைதீகவழியிலேயே கொண்டுவரவேண்டுமென்கிற ஆவா தகப்பனருக்கதிகமாயிருந்தது. ஆனபடியினால் தானே வீட்டில் வைத்துக்கொண்டு தேவநாகரம் கிரந்தம் முதலானவைகளைக்கற்றுக்கொடுத்துவந்தார். கிராமப்பள்ளியில் கொஞ்சம் எழுதவும், படிக்கவும், கணிதமும் கற்ருர். பிறகு தகப்பனரின் இஷ்டபிரகாரமே அத்யயனஞ் செய்யவாரம்பித்தார். இவர் தமையன் பஞ்சனதம் என்கிறவர், அல்லும் பகலும் அதிலேயே உழைத்துவந்தார். ராமஸ்வாமியோ அவருடன் அதற்கே கோபங்கொள்வார். ஏனென்ருல் அவன் தன் உடம்பையுங் கவனியாமல் பாடுபட்டுவந்தார். ராமசுவாமிக்கு எல்லாவற்றிலும் ஒரு நிதானமுண்டு. "மிதமீறினல் அம்ருதமும் விஷமாகும்" என்பதுபோல் எக்காரியத்திலேயும் இரண்டு நாள் ஒன்றில் அதிகமாக உழைத்துவிட்டு மூன்ரும்நாள் அலுத்து சலித்துநிற்கார். 'எரும்பூரக் கல்லுந்தேயும்' என்பதுபோல் நிதானமாகவும் படிப்படியாகவும் கற்றுக்கொண்டதைப் பூர்ணமாக அறிந்து பிராமணனுக்கு வேண்டிய எல்லாவற்றிலும் சமர்த்தனுனர். வயதும் பதினலாகி பெரியவனுனர் அழகிய அடர்ந்த குழலையும், கோளவடிவத்தையொத்த கண்களையும், முத்துப்பற்களையும், இந்துவதனத்தையும் அகண்ட மார்பையும், 'நீண்டு பெருத்த கைகளையும், நன்கமைந்த இடுப்பையும், விசாலமான நடைகளுக் கொத்தக்கால்களையும் உடையவருய் ராமஸ்வாமியிருந்தார். அவரை ஒரு தடவைப் பார்த்தவர்கள் இன்னுமொருதரம் பாதாதிகேசபரியந்தம் கண்ணுரக்காணுமல் செல்லார்கள். பாணிக்கிரகணஞ் செய்து

வைக்கப் பெற்றோர்கள் யோசிக்க ஈசனருளால் கொச்சி சமஸ்தானத்து வக்கிலாயிருந்து வடமொழியில் பாண்டித்யம் பெற்ற பிக்க்ஷாண்டார்கோவில் சப்தரிஷி சாஸ்திரிகளின் த்விதீய குமாரத்தியான லக்ஷிமியம்மாளுடன் நன்கு நடந்தேரியது. சப்தரிஷி சாஸ்திரிகளுக்கு மூன்று பெண்களும் இரண்டு பிள்ளைகளுமுண்டு. இரண்டாவதுபெண் நானே யாவேன். ராமஸ்வாமி கலியாணமானதிலிருந்து ஊரோர்கள்பார்த்துச் சந்தோஷப்படும்படியாயிருந்து வந்தார். ஆனால் புத்ரசந்தான மில்லாதகுறையே ஒருபெருங்குறையாயிருந்தது. கல்யாணமாய் சிலவருடங்கள் ஆய்விட்டது.மாமானாரான வெங்கிடராம அவதானிகள் மிகவும் வருந்தி என்னை அழைப்பித்து "அம்மா பிள்ளை ஒன்றுமேயில்லையே புத்திரனில்லாதவன் நரகத்தை யனுபவிக்கவேண்டுமே ஆகையினால் ஒரு அரசங்கன்றை நூற்றெட்டுப்பிரதக்ஷணஞ்செய்து அர்கியபூஜை சோடசோபசாரம் முதலானவைகளை செய்துவா" என்றார் நானும் சரிதான் என்றேன். சாதாரணமாய் அரசமரத்தையும், வேப்பமரத்தையும் ஒரு மண்டலம் தினசரிக்கிரமமாக 108 சுற்றுமெனிச் சுற்றி அதன் கீழே பிராம்மணர்களைக்கொண்டு பூஜைசெய்து வந்தால் புத்ரோத்பத்தி உண்டாகுமென்பதாகத் திண்ணம். அதற்காகவே இப்பொழுதுகூட "அரசப்பிரதக்ஷணம் செய்துவிட்டு அடிவயிற்றைத்தொட்டுப்பார்த்துக்கொண்டாளாம்" என்று பழமொழி உரைப்பதுமுண்டு. ஏனென்றால் அதனுடைய பலன் அவ்வளவு சீக்கிரமாகத் தெரியுமாம். நான் அரசங்கன்னுக்கு தினம் அவ்வளவுதூரம் போகவேண்டுமே அது கஷ்டமான சார்யமாச்சுதேவென்றேன். அதற்கு அவர் என்னைத்தெரியப்படுத்தி ஒருகிளையை யொடித்துவந்து வீட்டிலேயே வைத்து பிராண பிரதிஷ்டைசெய்து,பிரதக்ஷணம் சுற்றி வரும்படி செய்தார். இதையெல்லாம் கவனித்த என்கணவனார் என்னைக் கூவி நான் விருக்ஷபூஜைசெய்வது மகாநீசமான கார்யமென்றும்,தானிருக்கும் பொழுது அம்மாதிரி செய்யக்கூடாதென்றும்,அங்ஙனம் செய்வது தனக்கே கேடென்றும்,பகுத்தறிவுடன் கூடிய மனிதர்கள் தங்கள் ஆத்மாவை விருக்ஷத்தில் செலுத்துவது சாஸ்திரசம்மந்த மற்றதென்றும், விரோதமான தென்றும், சொல்லி அதைப்பண்ணிவைக்கிறவனுக்கு ஒன்றுந் தெரியாதென்றும்கோபித்தார். மேலும் தன்னைவிட வேறுதேவர் எனக்குயா

ருங்கிடையாதென்றும் அவருக்குசேவை செய்வதைவிட எனக்கு வேறு யக்ஞும் கிடையாதென்றும் சொன்னர். எனக்கு அதுதான் உண்மை என்று தோணிற்று. அப்படியே, அப்புறம், மனுஸ்ம்ருதியும் கூருகிறதென்றும் தெரியவந்தது. அதென்னவென்ருல்,

நாஸ்தி ஸ்த்ரீணாம் ப்ருதக் யஜ்ஞோ ந வ்ரதம் நாப்யுபோஷிதம்।
பதிம் ஶுஶ்ரூஷதே யேந தேந ஸ்வர்கே மஹீயதே।

அச்சமயத்திலிருந்து பதியே தெய்வமென்று அறிந்து அவர் முகங்கோணுமல் என்னல் கூடியவரையில் இருந்து வந்தேன். அதினல் நான் நன்மையை அடைந்தேனே தவிர கெட்டுப்போகவில்லே. சிலகாலமிப்படி யிருக்கையில் பரமேசுவர பிரீதியால் நான்கு பிள்ளேக்குழந்தைகளும் ஒரு பெண்குழந்தையும் பிறந்தது பெண்குழந்தை பிறந்து அதற்கு வயது பத்தும் ஆகிவிட்டது. இவ்விதமாக விருக்குங்கால் மணக்காலில் சாந்தாசிரம சந்நியாசி என்ற ஒருவர் வந்திரங்கியிருந்தார். இவர் பெயர்போன சந்நியாசி பாஷாஞானத்தில் பாண்டித்யம் பெற்று ஊரிலுள்ளோர் எல்லோருலும் மரியாதை செய்யப்பட்டு கண்டபேர் கைகட்டி நிற்கும்படியாயிருந்தார். வந்தவர்களுக்கும் மரியாதை செய்தவர்களுக்கும் உபதேசஞ்செய்துவந்தார். படிக்கிறவர் படிப்பார்கள். ஸ்தோத்திரஞ்செய்கிறவர்கள் ஸ்தோத்திரம் செய்வார்கள். தர்க்கஞ்செய்கிறவர்கள் தர்க்கஞ் செய்வார்கள். இப்படியாக பலபேர்கள் அவரைத்தினந்தோறும் மதித்துவந்தார்கள் இவருக்கு ஒழிவுநேரம் கிடைப்பது அரிதாயிருந்தது. ஏனென்ருல் வந்து காத்துக்கொண்டிருந்து வீட்டிற்குக்கழைத்துக்கொண்டுபோய் வாய்பொத்தி, இமை கொட்டாமல், தேகத்தின் மயிரெல்லாம் துடித்துநிற்க, சரீரத்தை ஸ்தம்பம்போல் நிறுத்தி ஸ்வாமிகளுடைய ஆசிகளுக்குக் காத்துக்கொண்டிருக்கிறவர்கள் அநேகம் பெயர்களிருந்தார்கள். அப்பொழுது அவதானிகளாகிய என்கணவனருக்கு ஒன்றும் புரியவில்லே ஊர் அமக்களத்தைப்பார்த்து. காலேயில் ஒரு நாள் எழுந்திருந்து ஸ்நாநம் செய்து திருபுண்டரம் தரித்து சந்தியாவந்தனத்தை முடித்து ஸ்வாமிகளென்று அழைக்கப்படும் அவரைக் கண்ணுசசென்ருர். போய்பார்த்தார் அங்கே. ஒன்றுந்தெரியாமல் திடுக்கிட்டு நின்ருர் கொஞ்சநேரம். ஏனென்ருல் அங்கு வந்துசேவை

[stamp]

செய்கிறவர்களில் பலர் 1703 செ. கிளாஸ்கோமல் உடுத்தினவும், தங்க முகங்கட்டின ருத்திராட்சம் அணிந்து விபூதிதரித்த வித வைகளே அதிகமாகவிருந்தார்கள். இதையும், இவர்களுடைய வேஷநடை உடை பாவனைகளையும் பார்த்து என் கணவனுர்'ஆகா' என்றும் "அக்கிரமச்செயல்களில் பெயர்போனவர்களும், ஊரறிந் தநாட்டு ஸ்திரீகளும்" இவ்விடத்திலிருக்கிறர்களே என்று ஒரு பக்கம் பிரமிக்க மற்றொருபக்கம் துக்கங்கொண்டார். உடனே அவர் அறியாமலே கோபம் வந்து அவதானிகள் "நீங்கள் ஒருநா ளும் முன்னுக்கு வரமாட்டீர்கள். உங்களுடைய குணங்களினல் அவரையுங்கெடுத்து விடுவீர்கள் போலிருக்கிறதே. இந்த கஷிவே ஷங்களிலெல்லாம் பிரயோஜனம் எள்ளளவு மேற்படாது" மனசுத் தமிருந்தாலொழிய வேறு எவ்விதமாகவும் நீங்கள் மேலானபதவி யை அடையமாட்டீர்கள் என்று சொல்லித்திரும்பிவிட்டார். பரத்ரு ஹரி சொல்லுகிறப்போல்,

𑌕𑌿𑌂 𑌵𑍇𑌦𑍈𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑌿𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑌪𑌠𑌨𑍈𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌮
𑌹𑌾𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍈𑌃 । 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌗𑍍𑌰𑌾𑌮𑌕𑍁𑌟𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌫𑌲𑌦𑍈𑌃𑌕𑌰𑍍𑌮𑌕𑍍𑌰𑌿
𑌯𑌾𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑍈𑌃॥𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑍈𑌕𑌂 𑌭𑌵𑌦𑍁𑌃𑌖𑌭𑌾𑌰 𑌰𑌚𑌨𑌾𑌵𑌿𑌧𑍍𑌵𑌂𑌸𑌕𑌾𑌲𑌾
𑌨𑌲𑌂। 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌪𑌦𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌕𑌲𑌨𑌂 𑌶𑍇𑌷𑌾𑌵𑌣𑌿𑌗𑍍𑌵𑍃𑌤𑍍𑌤
𑌯𑌃 ॥

ருக்வேதம் யஜுர்வேதம் சாமவேதம் முதலான வேதங்களெ ன்ன பிரம்மம் வைஷணவம் சைவம் பாகவதம், நாரதீயம் மார்கண் டேயம் ஆக்னேயம் பவிஷபம் பிரும்ம வைவர்த்தம் லிங்கம் வாரா கம்ஸ்காந்தம் வாமனம், கூர்மம், மத்ஸபம், கருடன்,பிரம்மாண்டம் முதலான பதினென் புராணங்களென்ன, வேதாந்தம் மீமாம்சம், வியாகரணம் தர்க்கம் ஜோதிஷம் வைத்தியம் முதலான சாஸ்திரங் களென்ன இவைகளெல்லாம் மனோசுத்தி யன்னியில் ஒருபொழு தும பயன்படா. மனோசுத்தி சகலத்தையும்விடமேலானது. ஸ்வா மிகளும் இல்லத்திற்கு வந்துத்தானகவே போஜனம்கேட்டருந்தி ஊரைவிட்டு வெளியேகினர். பெண்குழந்தைக்கும் வயதுபத்தாகி கல்யாணத்திற்கு யோக்கியமாயிருந்தது, அப்பொழுது அவ்வூரில் ஒரு பெரிய தனவந்தர் தன் பிள்ளைக்கு பெண் தேடும் நிமித்தமாக வந்திருந்தார். எல்லோரும் தங்கள் தங்கள் குமாரத்திகளை செவ்வ

னே அலங்கரித்து, அத்தனவந்தர் இறங்கியிருக்கும் வீட்டு அதிகாரிகளின் மூலமாய் பெண்களைக் சாண்பித்து வந்தார்கள். நான் என் புருஷனைப்போய் பார்த்துவரும்படி செய்தேன். நேருக பெண்ணையும் அழைத்துப்போகாமல், அவ்வீட்டுக்காரனைத் தேடாமலும் நேருக அத்தனவந்தரிடம் சென்று "உங்கப்பிள்ளைக்குப் பாக்கிறீர்கள் எனக்குப் பெண்ணிருக்கு" என்று தீரமாய் மொழிந்தார். எல்லோருடைய கோழைதனத்தையும் இவருடைய தீரத்தனத்தையும் கண்டு அவர்மெச்சி பெண்ணை வந்துபார்த்தார். அவருடைய பிள்ளைக்கே எங்களுடைய பெண்ணைக் கலியாணமாப் விமரிசையாய் நடந்தேரிபது. இதற்குள் எங்களுக்கும் நான்கு பிள்ளைகளாய் அவருடைய படிப்பின் நிமித்தமாக திருச்சிக்கு வரநேரிட்டது. மிகவும் கஷ்டத்துடன் திருச்சியிலிருந்து வருங்காலத்தில் என்தம்பி கல்யாணத்தின் நிமித்தம் இப்பொழுதிருக்கும் இசசென்னைக்கு வந்தோம். இப்படி சென்னையிலிருக்கும்பொழுது எனககு கங்கைக்குப்போய் ஸ்நாநஞ்செய்து வரவேண்டுமென்கிற ஆசை உண்டாயிற்று. மணக்காலிலிருந்தும் இரண்டுதடவை யாத்ரீகர்களுடைய கோஷ்டி சென்னைவழியாய் காசிக்குப்போனர்சள். எனக்கு அவர்களுடன்போய் காசிவிஸ்வேஸ்வரனை தரிசனம்செய்து வரவேண்டுமென்கிற ஆசை அதிகமாக விருந்தது ஏனென்றல்

கங்கா கங்கேதி யோ ப்ரூயாத் யோஜநாநாம் சதைரபி।
முச்யதே ஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகம் ஸ கச்சதி॥

காசிக்குப் போகவேண்டும் என்கிற ஆவா அதிகரித்து அதுவே பைத்தியமாய் போய்விட்டது. இதைக்கேட்டுக்கொண்டிருந்த அவதானிகள் என்னை வெய்து சொல்லுவாருயினர். "உனக்கு யாதுதெரியும், என்னதெரியும், காசிக்கு யார்போகிறது என்னத்திற்குப் போகிறது. பொழுதுவிடிந்ததிலிருந்து தூங்கும்வரையிலும் பொய் புகலுவதினுலும் நீசமான காரியங்களினுலும் மனதை அசுத்தப்படுத்திக் காசிக்குப் போனல்தானென்ன, பிருந்தாவனம் போனல்தானென்ன.

[illegible] நஶ்யதி।
[illegible] நஶ்யதி॥

ஸ்நாநஞ்செய்வதினல் ஒருநாளும் பாபம் ஒழியாது தேகத்தின் அழுக்குமாத்திரம் போகும். உள்ளழுக்கு ஒருநாளும் போ

காது. ஆகையினல் நீ கங்கைக்குப் போனுலும் சரி கைலாச மலைக்குப் போனுலும்சரி. மனதை சத்தியத்தினல் சுத்தம் செய்தா லொழிய ஒருநாளும் சுத்தமாகாது. இதற்கு செய்யவேண்டியது யாதெனில் பூரணமான பிரம்மசர்யத்தை ஆசிரயித்து வித்தையை அத்யயனஞ் செய்யவேண்டும். இம்மாதிரி நம்முடைய அரியபெ ரிய முன்னோர்கள் செய்துவந்திருக்கிறார்கள்.

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌦𑌯𑌾 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍇𑌵 𑌚 ।
𑌦𑌾𑌨𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌦𑌮𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌪𑌰𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌦𑌿𑌤𑌾 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌧𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।
𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌤𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑌨𑌸𑌃 𑌪𑌰𑌾 ॥

காணுததையும் கேட்காததையும் உண்மையா யில்லாததை யும் தெரிந்ததுபோல் செய்கிறது எளிந்தவன் தெரியவில்லையென் று சந்தேகங்கேட்டால் அலக்ஷியஞ்செய்கிறது, ஆராய்ந்து நிதா னித்து பொருமையுடன் தெரிந்துகொள்ளுவதற்கு முன்னலேயே தெரிந்தாப்போல் அவசரத்துடன் சொல்லுகிறது, இந்திரிய நிக்ர கத்திற்குப் பதிலாக ஸ்திரீபுருஷர்கள் அதிகமாகக் கூடுமிடத்திற் குப்போய் கெட்டவழியில் தூண்டுகிறதற்குக் காரணமாயிருக்கும் சேர்ந்த ஸ்நாநமும் யாத்திரைசெய்கிறதும். தயையுக்குப் பதிலாக சக்தியற்றிருக்கும் ஏழைகளை பகவான்பேரில் குரூரத்துடன் கொள்ளையடிக்கிறதும், வித்யாதானம், படிப்பது,படிப்பிப்பதற்குப் பதிலாக பாஷாண்டி கபடவஞ்சகன் ஆலவீ இவர்களுக்குத் தானங் கொடுக்கிறதும் துக்கத்தி லதிகவிசனமும் சந்தோஷத்தில் அதிக ஆனந்தத்துடன் கூத்தாடுகிறதும் கெட்டகாரியத்தைசெய்து அதி ஞல் அற்பசந்தோஷத்தில் மூழ்குகிறதும் ஞானத்திற்குப் பதிலாக சொன்னதை எல்லாம் உண்மையென்று நம்புகிறதும், திருதி அல்லது சத்ய பிரதிக்ஞைக்குப் பதிலாக் முரட்டுவீம்பு பிடிக்கிற தும் கபடவஞ்சகமான தீர்த்தங்கள் மேற்கண்ட அடிகளில் சொல் லப்பட்டிருக்கிறவைகள் தான் உண்மையான தீர்த்தங்கள்.

... ... ... ... ... ...

நான் ஏகாதசிவிரதம் சிறுவயதிலிருந்து செய்துகொண்டுவந் தேன். ஏகாதசி தினத்தன்று நான் சாப்பிடுகிறதில்லை. உபவாசம்

அநேகருடைய உபதேசத்தினுலிருந்தேன். உபவாசத்தினுலுண்டான அரியபெரிய லாபங்களைக்கேட்டு நமக்குமப்படி வாய்குமென்று நம்பினேன். ஆனுல் என்னுடைய பர்த்தாவானவர் இங்ஙனம் செய்வது பிழையென்றும், தானிருக்கும்போதே உபவாசமிருந்தால் அதுதனக்குக் கெடுதலென்றும் சொன்னுர். இப்படியேதான் புராதன கிரந்தங்க்ளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணுஸ்முருதியில் என்னசொல்லுகிற தென்றுல்,

வடௌ ஜீவதியொயொஷி உபவாஸவ்ரதம்சரெத் ।
ஆயுஃஸா ஹர தெஹ தஃஹரகம்ஞெவ ஒுதி ।
ஜீவஹு தஃயா நாரீஉபொஷ்ய வ்ரதசாரிணீ ।
ஆயுஷ்யம் ஹர தெஹ தஃஸா நாரீ நரகம்வ்ரஜெத் ॥

... ... ... ... ... ...

இப்பொழுது நானிருக்கும் வணணம் செய்தவர் அவர்தான். ரிஷிகள் முனிகளால் வரையப்பட்ட சிலபுத்தகங்களையும் படிக்கப்பெற்றேன். இவ்விதமாக அவரிருந்து வரும்போது கொடிய சோபை அவரைப்பிடித்துக் கொணடது. அது அவ்வளவு விபரீதமாய் முடியுமென்று ஒருவரும் நினைக்கவில்லை. நாளொரு கோளாரும் பொழுதொரு கஷ்டமுமாக சரீரம் பலஈனமாகிவந்தது. என்னைப்பற்றிக் கவலை வேணடியதில்லை நீங்கள் அதற்காக விசாரமடைவதில் பயனில்லை, நான் பரமன்பதவியை சந்தோஷத்துடன் அடைகிறேன் என்று உரைத்தார். கார்த்திகை கிருஷ்ணபக்ஷம் சதுர்தசியன்று இவ்வுலகவாழ்கையை உதரும்படியாச்சுது, அன்றிரவு புத்திரன், புத்ரி, பேரன், பேத்தி, மாப்பிளை அவர்கள்சுற்றி விசனமுற ஒன்றேமுக்கால் மணிக்கு ஸ்வர்கமடைந்தார்,

ஓஷிஸ்ரா நிஜெவ ஸவிதஃஸிதா நிஃ...ஸாஃவா
யஜ்ஞஷுஞ ஆஸஃவா ॥ யஜ ॥

ஸித்தார்த்தி விருச்சிக }
சுக்லதசமி }

ர. லக்ஷ்மி.

சென்னை 600 008.

ர. லக்ஷிமி அம்மாள்,

14, பள்ளியப்பன் தெரு,

சௌகார்பேட்டை, மதராஸ்.